**சரியான விடை+2முதல்திருப்புதல் தேர்வு ஜனவரி2018**

1.(b) இந்து கூட்டுக் குடும்பம்
2.(C) கூட்டுப் பங்கு நிறுமம்
3.(c) வரையறையில்லாதது
4.(d) வில்லியம் R பேசட்
5.(a) பூரண நல்ல நம்பிக்கை
6.(d) நிறுவனம்
7.(a) ஒப்பந்தத்தால்
8.(இ) 7
9.(அ)தொழில் கூட்டுருவாக்க சான்றிதழ் பெற்றவுடன்
10(c) நிறும செயல்முறை விதிகளின் மாதிரி
11.(a) மேலாண்மை இயக்குநர்
12.(a) 15 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
13.(d) இவை அனைத்தும்
14.(a) பொது விடுப்புகள்
15.(b) 21
16.(a) காளை
17.(a) இங்கிலாந்து
18.(c) சரக்குகள்
19.(a) அரசு நிறுமம்
20.(a) 51%

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. தனி நபர் வணிகமுறை
22. தனியாள் வணிகம்
23. 1932
24. வெளிப்படை ஆணையுரிமை
25. இணைவினை
26. நிறுவனக்கலைப்பு
27. உரிமையாளர்கள்
28. கடனாளர்கள்
29. பொது வரையறு நிறுமம்
30. நிறுமச் செயல்முறை விதிகள்
31. அழைப்புத் தொகை
32. இயக்குனரவை
33. 5
34. மும்பை
35. செபி
36. பட்டியலிடுதல்
37. கூட்டுறவு சங்கம்
38. வரையறு பொறுப்பு
39. துறைமுறை அமைப்பு
40. இயக்குநரவை

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41. கர்த்தா:** இந்துக் கூட்டுக் குடும்பத் தலைமை உறுப்பினர் ஆவார்.

**42. பன்னாட்டு நிறுமம் எ.கா:** 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்.

**43.கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகள் :** தனியாள் வணிகம், இந்துக் கூட்டுக்குடும்பம், கூட்டாண்மை

**44 வரையறுத்த கூட்டாண்மை:** ஒரு கூட்டாண்மையில் **கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தால்,**அது வரையறுத்த கூட்டாண்மை எனப்படும். ஏதேனும் ஒரு கூட்டாளியின் பொறுப்பாவது வரையறாப் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**45.கூட்டாளிகளின் வகைகள்:** 1. உழைக்கும் கூட்டாளி. 2. உழையா கூட்டாளி : 3. பெயரளவு கூட்டாளி (பாசாங்கு) 4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி

**46. பங்கு முனைமம்:** ஒரு நிறுமத்தின் பங்கொன்றின் வெளியீட்டு விலை முகமதிப்பை விட அதிகமாக இருக்கும். வெளியீட்டு விலைக்கும், குறைவாக உள்ள முகமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு முனைமம் என்று சொல்லப்படுகிறது. உ-ம் பங்கொன்றின் முகமதிப்புரூ10 எனவும் அதுரூ12க்கு வெளியிடப்படுவதாக கொண்டால் பங்குமுனைமம்ரூ2ஆகும்.

**47. வரையறு பொறுப்பு:** கூட்டுப் பங்கு நிறுமத்தில் ஒரு பங்குநர் தனது **பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும்** மதிப்பளவே பொறுப்பாகிறார்.

**48. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்** 1)ஆண்டு கணக்குகள், இயக்குநர் மற்றும் தணிக்கையர் அறிக்கைகளைவிவாதித்து பெற்றுக் கொள்ளுதல் 2)பங்காதாயம் விளம்புதல் 3) பதவி விலகும் இயக்குநர் இடங்களில் இயக்குநர்களை நியமித்தல். 4)தணிக்கையரை நியமித்து, அவருடைய ஊதியத்தையும் நிர்ணயம் செய்தல்

**49.கூட்டத்தில் குறைவெண் :** ஒரு கூட்டம் செல்லத்தக்கதாக இருக்க வருகைதர வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே குறைவெண் ஆகும்.

**50: பத்திரம்:** ஒரு பத்திரம் என்பது ஒருவரின் உடைமை உரிமை அல்லது கடனீட்டு உரிமையை குறிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது ஆவணம் ஆகும். எ.கா. பங்குகள், கடனீட்டுபத்திரம்.

**51. பரஸ்பர நிதிகள் :** இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் ஓழுங்கு படுத்துதல் 1993 விதிகளின்படி, ‘பரஸ்பர நிதி’ என்பது “அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்” என வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.

**52.இராக்டேல் முன்னோடிகள்:** இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும். இராபர்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தையாவார்.

**53. ஆதரவுப் பங்காதயம் :** கூட்டுறவு சங்கம் தனது ஆண்டு இலாபத்தை அதன் உறுப்பினர்கள் சங்கத்தை எந்த அளவு பயன்படுத்திக்கொள்கிறாரோ அந்தஅடிப்படையில் மேலூதியமாகவழங்குகிறது.இதற்கு பகிர்வுநிதி என்றுபெயர்.

**54. நாட்டுடைமையாக்கம் :** ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில்களை அரசு ஏற்று நடத்தினால் அதனை நாட்டுடைமையாக்கம் எனலாம்.

**55. அரசுத் தொழில்கள் இலக்கணம்:** உற்பத்தி,விவசாயம்,நிதி,வணிகம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருக்கும் அரசுக்குச் சொந்தமான தொழில்களை அரசுத் தொழில்கள் எனலாம் - A.H. ஹேன்சன்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56.இந்து கூட்டுக்குடும்பம்:** இந்தியாவில் இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பு தலை சிறந்து விளங்குகிறது. இது இந்தியாவில் மட்டுமே உள்ளது. வியாபாரம்: கைத்தொழில்கள் சிறுதொழிற்ச் சாலைகள் போன்றவை.இந்து கூட்டுக் குடும்ப வியாபார அமைப்பின் குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர் 2.குடும்ப தலைவர் மூலம் வியாபாரத்தை நடத்துவர் 2.மிட்டக்சார சட;டத்தின் படி : 1.ஒரு குடும்பத்திலுள்ள ஆண்வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள் .2.இச்சட்டம் அஸ்ஸாம் மற்றும் மேற்கு வங்காளம் தவிர இந்தியாவில் பிறபகுதிகளில் பயன்படுத்தப்படுகிறது .3.தாயாபாகா சட;டத;தின; படி 1.சொத்தின் உரிமை மாற்றம் கூட்டு வாரிசுதாரரின் வாரிசுகளுக்கு வாரிசு உரிமையின்படி ஏற்படுவதாகும். இது பிறப்பின் காரணமாக அல்ல.2.கூட்டு வாரிசுதாரர் அவரது சொத்தின் பங்கை மற்ற கூட்டு வாரிசுதாரரின் சம்மதமின்றி மாற்றித்தர இயலும்

**57..கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள்** 1.நிறுவனத்திற்கு எதிராகவோ அல்லது ஏனையகூட்டாளிகள் மீதோ கூட்டாண்மை சட்டத்தின்கீழ் பதிவுரா நிறுவனத்தின்மீது ஒரு கூட்டாளி வழக்குதொடர முடியாது. 2.மூன்றாமவர்மீது எந்தஉரிமையியல் நீதிமன்றத்திலும் பதிவுராநிறுவனமொன்று வழக்கு தொடர முடியாது. 3.நிறுவனத்திற் கெதிராகவோ கூட்டாளிகளுக்கெதிராகவோ மூன்றாமவர் எவரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. 4.தனது கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. 5.பதிவுசெய்யாநிறுவனம் மூன்றாம்நபருக்குஎதிராக ரூ.100க்குமேல் திரும்பப்பெற இயலாது. 6.நிறுவனத்தை கலைக்கக் கோரி,கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்ககோரி அல்லது கலைப்பின் போது கணக்குகளை தீர்த்துக்கொள்ள கூட்டாளியொருவர் வழக்கு தொடுக்க முடியாது. 7.நிறுவனத்தின் வியாபாரகுறிகள், பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக்கூடாது என தடுக்கும் உரிமையை கூட்டாண்மை இழக்கும்.

**58.தனி வரையறு நிறுமம் பொது வரையறு நிறுமம் வேறுபாடு :**

| அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப் பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை நிறுமப்பதிவாளரிடம் சமர்பிக்க வேண்டும். | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத்தில் உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| குறுமப்பங் கொப்பம் | அவசியமில்லை | கட்டாயமாக்கப்பட்டுள்து |
| இயக்குநர் கள் | குறைந்தது 2 இயக்குநர்கள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்கள் தேவை |
| சட்ட முறை கூட்டம் | அவசியமில்லை | 6மாதத்திற்குள் கூட்ட வேண்டும். |
| தகுதிப்பங்கு கள் | இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட தகுதிப்பங்குகள் பெறவேண்டிய அவசியமில்லை | இயக்குநர்கள் தகுதிப்பங்குகளை பெற்றிட வேண்டும். |
| குறைவெண் | கூட்டம் செல்லத்தக்கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 |
| பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டுள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| இயக்குநர்களின் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றலாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**59.பங்குகளை வட்டத்தில் வெளியிட நிபந்தனைகள்:** 1. வட்டத்திற்கு வெளியிடவுள்ள பங்குகள் முன்னரே வெளியிட்ட பங்கு வகையை சார்ந்ததாக இருக்க வேண்டும். 2. சாதாரண தீர்மானத்தின் மூலம் இதற்கு அதிகாரம் தந்திருக்க வேண்டும். 3. உயர்ந்தளவு தள்ளுபடி பங்கு ஒன்றின் முக மதிப்பில் 10 விழுக்காடுக்கு இது மிகக் கூடாது. 4. நிறுமம் தொழில் தொடங்கிய நாளிலிருந்து குறைந்தது ஓராண்டாவது சென்றிருக்க வேண்டும். 5. இதற்கு மைய அரசின் ஒப்புதல் பெற வேண்டும். 6. மைய அரசு அனுமதித்த 2 மாதங்களுக்குள் வெளியிட வேண்டும்.

**60. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?** இயக்குநர்கள் வழக்கமாக நிறும செயல்முறை விதிகளில் பெயர் குறிப்பிட்டு நியமனம் பெறுவர். இல்லையெனில், அமைப்பு முறை ஏட்டில் கையொப்பமிட்டோர் முதலாம் இயக்குநர்களாகக் கருதப்படுவர். **அ. நிறுமம் நியமிக்கும் இயக்குநர்கள்:** ஒவ்வோராண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலம் இயக்குநர்கள் நியமனம் பெறுகின்றனர். **ஆ. இயக்குநரவை நியமிக்கும் இயக்குநர்கள்** கூடுதல் இயக்குநர்களை இயக்குநரவையே நியமிக்கலாம். தற்காலிகமாக எழும் காலி இடங்களை இயக்குநரவையே நியமித்து நிரப்பலாம். (இறப்பு, பதவி விலகல் போன்ற சூழ்நிலைகளில்) மாற்று இயக்குநர்களையும் இயக்குநர் அவை நியமிக்கலாம். **இ. மூன்றாம் தரப்பினர் நியமிக்கும் இயக்குநர்கள்:** செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கினால் நிறுமத்திற்கு கடன் வழங்கியிருக்கும் வங்கி அல்லது நிதி நிறுவனங்கள் தங்கள் சார்பில் பிரதிநிதிகளை இயக்குநர்களாக நியமிக்கலாம். **ஈ. மைய அரசு நியமிக்கும் இயக்குநர்கள்:** நிறுமச் சட்ட அவை அளித்த ஆணையின் அடிப்படையில் மைய அரசு இயக்குநர்களை நியமிக்கலாம்.

**61. ஊக வணிகர்களின் வகைகள் காளை (தெஜிவாலா)** : பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை ஊக வணிகர் ஆவர். இவர் எல்லாம் நன்மைக்காகவே என்ற மனப்பான்மை கொண்டவர் **கரடி ஆல்லது மண்டிவாலா:** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். ஒரு கரடி ஊக வணிகர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர். **கலைமான்**: கலைமான் ஊக வணிகர் முன்னெச்சரிக்கை உடையவர். இவர் **'முனைம வேட்டையாளர்'** என்றும் அழைக்கப்படுகிறார். **முடவாத்து:** தற்போதைய, தம் நடவடிக்கைகளில் உள்ள இடர்ப்பாடுகளைத் தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கரடி ஊக வணிகரே முட வாத்து என்று அழைக்கப்படுகிறார்.

**62.கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்துஅதன் சிறப்பியல்புகளை தருக ?** இது பேரளவு சில்லறை வியாபாரஅமைப்பு கூட்டுறவு அமைப்பில் தொடங்கப்படுவது இதில் விற்கப்படும் பொருட்கள் விலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். ஒரே விலை பேரம் பேச இயலாது. வரைவிலக்கணம ;: சில்லறைவிற்பனைசெய்யும்துறைவாரிஅமைப்பு நான்குஅடிப்படை துறைகளைக் கொண்டது. மளிகைப் பொருள் சுயசேவைப்பிரிவு மாமிசப் பால் பொருள்கள் மற்றும் வீட்டு உபயோகப்பொருள்கள்விற்பனைசெய்யும்இடம் சலுகைஅடிப்படையில்துறைகளைகுத்தகைக்கு நடத்தும் இடம் என்று M.M.ஜிம்மர்மென் வரையறுக்கிறாா;.

சிறப்பியல்புகள்

1. பேரளவுசில்லறைவிற்பனைநிலையம்.
2. பலவகையானபொருட்கள்கிடைக்குமிடம்
3. சுயசேவைவிற்பாண்மைதேவையில்லை
4. பலதுறைகளைகொண்டது.
5. ரொக்கஅடிப்படையில்விற்பனைசெய்யப்படும்
6. பொருட்களில்கலப்படம் தவிர்க்கப்படும்

7.சரியான அளவு எடை குறை என்ற நிலை ஏற்படுவது இல்லை.

8.அரிதான பொருட்கள் கூட இங்கு விற்பனை செய்யப்படும்.

| **63. பொதுத்துறை** | **தனியார்துறை** |
|---|---|
| சேவை நோக்கம் இத்துறைக்கு இரட்டை நோக்கங்கள் உள்ளன. பொருளாதார முன்னேற்றத்தை மற்றும் மக்களிடையேபொருளாதார ஏற்றத்தாழ்வு இல்லாத நிலையில் ஏற்படுத்துதல் ஆகியவை | இலாப நோக்கம் மட்டுமே கொண்டுள்ளது. |
| போதிய அளவு மற்றும் வறையறா நிதி. மக்களின் சேமிப்பை வங்கி கடன்பத்திரம் வாயிலாக வெற்றிகரமாக திரட்ட முடியும். | வரையறுக்கப்பட்ட நிதி.நாட்டு மக்களின் சேமிப்பைதிரட்டுவதிோ வெளிநாட்டிலிருந்தோ உதவி பெறுவது இதற்கு எளிதல்ல. |
| ஒரு சிலரிடம் செல்வமும் வருமானமும்செரிவடைவதை தடுக்க முடியும். | பொருளாதார வலிமை செரிவடைவதை துண்டுகிறது. |
| தனியார் துறையினரால் புறக்கணிக்கப்பட்ட தொழில்களை ஏற்ற நடத்துதல் | தனியார் துறை எப்பொழுதும்அபாயம் குறைவாக உள்ளது மற்றும்லாபம்அதிகமக உள்ள தொழில்களை மட்டுமே நடத்தும் |
| நாட்டின் வழங்களை பாதுகாக்கின்றன. | காடுகள் சுரங்கங்கள் போன்றவற்றைதனியர் துறைதன்சுயநலத்திற்காக சுரண்டுகிறது. |
| பின்தங்கியபகுதிகளில் தொழில்நிறுவனத்தை தொடங்கி அனைத்து பகுதிகளிலும் சமமாக வளர்ச்சிபெறசெய்படுகிறது | பின்தங்கிய பகுதிகளில் தொழில் தொடங்குவதை விரும்புவதில்லை. |
| அடிப்படை தொழில்கள் இராணுத்தை சார்ந்த தொழில்கள் அரசின் கட்டப்பாட்டில் உள்ள பொதுத்துறையில்உள்ளது | நுகர்வோர் பொருள்கள் விவசாயம் போன்றவை தனியார் துறைக்கு நிடப்பட்டுள்ளன. |
| நுகர்வோர்களின் நலனை காப்பது இதன் தலையாய பணியாக உள்ளது.அவர்களுக்கு தரமான பொருட்களையும் பணியினையும் குறைந்த விலையில் பொதுத்துறை வழங்குகிறது. | நுகர்வோர் சுரண்டப்படுகின்றனர். |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64)அ) 1.நோக்கங்களின்ஒருமை:** அமைப்பின் குறிக்கோள்கள் தெளிவாக முடிவு செய்யப்பட வேண்டும். நோக்கம் இலக்கினை அடையக்கூடியதாக இருக்க வேண்டும்.

**2.வேலைப்பகிர்வு:** அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிட வேண்டும். இதன்மூலம் மொத்த பணிச்சுமை உணரப்படும். இது பகிர்வு செய்யப்பட வேண்டும். இதுவே துறைப்படுத்தல் ஆகும். **3. கட்டுப்பாட்டு வீச்செல்லை :** ஒரு அதிகாரி எத்தனை கீழ்பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்ற எல்லையே கட்டுப்பாட்டு வீச்செல்லை எனப்படும். ஓர் உயர் அலுவலர் தனக்கு கீழ் உத்தம எண்ணிக்கையில் கீழ்பணியாளர்களை மேற்பார்வை செய்வதே அமைப்பின் திறனை மேம்படுத்தும். **4. தரவரிசைக்**

**கோட்பாடு** : ஆணையுரிமையின் வரிசை உயர்மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ் நோக்கி வர வேண்டும். இது "கட்டளை இணைப்பு" என்றும் அழைக்கப்படும். **5. கட்டளையொருமை** : ஒரு பணியாளர் ஒரு அதிகாரியிடமிருந்தே ஆணைகளை பெறும் வகையில் அமைப்பு இருக்க வேண்டும். இரண்டு அதிகாரிகளின் கீழ் ஒருவர் பணியாற்றும் நிலை எழுந்தால் யாருடைய ஆணையை நிறைவேற்றுவது என குழப்பம் ஏற்படும், இதன் விளைவாக குழப்பமும், ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்பு அதிகம். **6. பணி வழி வரைவிலக்கணம்** : ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம். ஒவ்வொரு பணியாளருக்கும் இடையே உள்ள தொடர்புகள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். **7. ஒருமுனை இயக்கம்** : ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின், தொகுதியின் நோக்கங்கள் வெற்றியடைய ஒரு தலைமையும் ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும், பணிகளை நிறைவேற்றவும் இது அவசியம். **8. ஒருங்கிணத்தல்** : விரும்பும் இலக்கினை அடைய நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு துறையும் மற்ற துறைகளுடன் அடிக்கடி கலந்து ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். இலாபம் அதிகரிக்க கொள்முதல் துறையும், விற்பனைத் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். **9. அதிகார ஒப்படைவு** : ஓர் உயர் அதிகாரி தனக்கு கீழ் உள்ள பணியாளரிடம் சில பணிகளை ஒப்படைக்கிறார். இதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும், உரிமைகளையும் வழங்க வேண்டும். கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.**10. பொறுப்பு கோட்பாடு** : ஒரு மேலதிகாரி தனக்குக் கீழ்பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்கு பொறுப்பாகிறார். அலுவலர் தனது மேலதிகாரிக்குப் பொறுப்பாகிறார். **11. நெகிழ்வுத்தன்மை** : மாறும் சூழ்நிலைக்கேற்ப அமைப்பும் மாறக்கூடிய வகையில் இருக்க வேண்டும். சீர்குலைவு ஏதுமின்றி விரிவுபடுத்தக்கூடிய வகையில் அமைப்பு இருத்தல் வேண்டும். இதுவே நெகிழ்வுத்தன்மையாகும். **12. திறமை** : அமைப்பின் வெற்றிக்கு திறமையே திறவுகோல். திறமை பயிற்சி மூலம்மேம்படுத்தப்படலாம். குறிக்கோள்களை குறைந்த செலவில் அதிக பலனுடன் நிறைவேற்ற திறமை பயன்படும். **13.தனித்திறமை** : அமைப்பு தனிநபர் திறமை தொடர்பானது. எனவே, பணியாளர் தேர்வு, இட அமர்வு, பயிற்சி அவசியமாகிறது. அமைப்பு மனிதவளத்தை உத்தம அளவில் பயன்படுத்தி வளர்ச்சித்திட்டங்களை ஊக்கமடையச் செய்ய வேண்டும். **14. எளிமை** : அதிகார படிநிலை மட்டங்கள் அதிகமாக இருந்தால் செய்தித் தொடர்புகளில் சிக்கலும், குழப்பமும், மோதலும் ஏற்படும். ஒருங்கிணைப்பு முடியாது போகலாம். எனவே, எளிமையான படிநிலைகள் அமைக்கப்பட வேண்டும்.

**64.ஆ) பொதுகழகத்தின் இயல்புகள்** :

**1.தனித்தியங்கும் சட்டத்தன்மை:** இது அதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.

**2.நீடித்த நிலைத்தன்மை:** இது நிறுமத்தைப்போன்று பொது முத்திரை மற்றும் நிலைத்தன்மையையும் பெற்றிருக்கும்.தனது பொது முத்திரையின் கீழ் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம். **3.அரசு முதலீடு:** அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும்.

**4.நிதி தன்னாட்சியுரிமை:** அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான நிதிக்காக இந் நிறுவனங்கள் அரசை சார்ந்திருப்பதில்லை. தேவைப்பட்டால் பொதுமக்களிடம் அல்லது அரசிடம் கடன் பெறலாம். **5.நிர்வாகம்:** பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**6.சேவை நோக்கம்:** இது லாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கை கொண்டு செயல்படும்.அதாவது சரக்கு அல்லது பணியினை நியமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.

**7.பணியாளர்கள்:** பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்ல.அக்கழகமே அவர்களின் பணியமர்த்தல் சம்பளம் இன்ன பிறப் பணிகளை தீர்மானிக்கும்.

**8.உரிமை மற்றும் கடமை:** இதைப்படைக்கும் சட்டமே உரிமைகள் கடமைகள் பொறுப்புகள் ஆகியவற்றை தெளிவாக முடிவு செய்யும். **9.அரசு தலையீடின்மை:** இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது.சுதந்திரமாக தம் கொள்கைக் கழகங்கள் செயல்படுத்தலாம். **10.தன்னாட்சியுரிமை:** இக்கழகங்களுக்கு நிதி மேலாண்மையில் தன்னாட்சியுரிமை உள்ளது.இயக்குநரவையால் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்நிறுவனங்கள் தங்கள் நிதியினை பயன்படுத்தலாம். **11.பதில் சொல்லும் கடமை:** இக்கழகங்களுக்கு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கும் அத் தொழில் சார்ந்த அமைச்சரகத்திற்கும் பதில் சொல்லும் படமை உண்டு. **12.தொழில்கடமை:** லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் இல்லாமலிருப்பினும் கழகங்கள் தொழில் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன. **பொதுக் கழகங்களின் நிறைகள்**

1. **அரசு நிதி.** இக்கழகங்கள் மூலதனம் முழுவதையும் பங்கு முதலாக அரசிடமிருந்து பெறுகிறது. பொதுமக்களிடமிருந்தும் குறைவான வட்டிக்குக் கடனைத் திரட்டுகிறது.

**2.தன்னாட்சியுரிமை.** இவை தன்னுடைய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்துக்கொள்கிறது. இவ்வமைப்புகள் தானே தன் நோக்கத்தையும், அவற்றைச் செயல்படுத்தும் முறையையும் தீர்மானித்துக் கொள்கின்றன. 3. நெகிழ்வுத் திறன். பொதுக்கழகம் வணிக தேவைகளுக்கேற்ப நெகிழ்வுத்திறன், முனைப்பாற்றல்ஆகியவற்றோடுதன் தொழிலை

நடத்த இயலும். நிறுவனத்தின் நலனுக்குத் தேவையான முடிவுகளை எடுக்க இதற்குச் சுதந்திரம் உண்டு. **4.அரசியல் தலையீடின்மை.** அரசியல் தலையீடு, அரசினால் ஏற்படும் தாமதம்ஆகிய குறைபாடுகளின்றி இது இயங்க முடிகிறது. நிறுவனத்தின் செயல்பாட்டுக்குத் தேவையான கொள்கைகளை வகுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. **5. பொது நலன் காத்தல்.** இதன் செயல்படும் விதம், இதன் முக்கியமான கொள்கைகள் போன்றவற்றின் மீது பாராளுமன்றம் மற்றும் தக்க அமைச்சகத்தின் கண்காணிப்பு இருப்பதால் பொது நலனுக்குப் புறம்பாக இது செயல்படுவதற்கான வாய்ப்பில்லை.

**பொதுக்கழகத்தின் குறைகள் 1. வரையறுக்கப்பட்ட தன்னாட்சி உரிமை.** நடைமுறையில் அரசு அலுவலர்களும், அமைச்சர்களும், அரசியல்வாதிகளும் நேரடியாகவோ, அல்லது மறைமுகமாகவோ இதன் செயல்பாட்டில் தலையிட முயற்சிக்கிறார்கள். எனவே இவ்வமைப்புகளுக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சியுரிமைதான் வழங்கப்படுகிறது. அதாவது இவை பெற்றிருப்பதாகச் சொல்லப்படும் இத்தன்னாட்சி உரிமை ஏட்டளவிலேயன்றி, நடைமுறையில் காண்பதரிது. **2. மாற்றங்கள் செய்வது கடினம்.** மாறுபடும் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப இவை தமது அமைப்பு, இயக்கம், நிருவாக முறைகளை மாறுபடுத்திக் கொள்ளலாம் என்பது அவ்வளவு எளிய செயலன்று. ஏனென்றால், இக்கழகங்கள் சட்டங்களால் உருவாக்கப்படுவதால், அச்சட்டங்களைத் தக்கவாறு திருத்தியமைக்கப் பாராளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதேயாகும். **3. தவறாகப் பயன்படுத்தப்படும் உரிமை.** பல நேரங்களில் இந்த அமைப்பிலுள்ள சுதந்திரத்தையும் உரிமைகளையும் அதன் தலைமைப் பொறுப்பிலிருப்பவர்கள் தவறாகப் பயன்படுத்தி, பொது நலனுக்குக் கேடு விளைவித்திருக்கிறார்கள். பொது நிதியை தேவையற்ற திட்டங்களில் முதலீடுசெய்து வீணடிக்கிறார்கள். **4. திறமையின்மை.** பெரும்பாலும் இது போட்டியற்ற சூழ்நிலையில் செயல்படுவதால் படிப்படியாக இதன் திறமை குன்றத் தொடங்குகிறது. மேலும், இந்நிறுவனங்கள் அடையும் நட்டத்தைப் பொதுமக்கள்தான் ஏற்க வேண்டியுள்ளது. ஏனெனில், நட்டத்தை ஈடு செய்வதற்காக அரசு கருவூலத்திலிருந்து இவற்றிற்கு மான்யம் அளிக்கப்படுகிறது. **5. ஈடுபாடின்மை.** பொதுக்கழகங்கள் சம்பளம் பெறும் அலுவலர்களால் மேலாண்மை செய்யப்படுவதால் இந்நிறுவனங்களின் செயல்பாட்டிலும், வளர்ச்சியிலும் அவர்கள் அதிக அக்கறை காண்பிப்பதில்லை. சில நிறுவனங்களில் நிர்வாகப் பணிக்குத் திறமையுள்ள பணியாளர்கள் இல்லாமல் அல்லல் படுவதையும் நாம் சுட்டிக் காட்டுதல் நன்று.

**65.அ) தனிவணிகத்தின் நன்மைகள் ஏதேனும்10 :**

**1.நன்மைகள் : 1.எளிதான அமைப்பு :** தனியாள் வணிகத்தை சட்டச் சிக்கல்கள் ஏதுவுமின்றி துடங்கலாம். ஒப்பந்தம் பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்கு தேவையில்லை.

**2.நேரடி ஊக்குவிப்பு :** 1.வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியார் வணிகத்தைச் சாரும். எவருடன் ஒப்பிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

**3.நெகிழ்ச்சி தன்மை :** தனியாள் வணிகம் என்பது முழு அளவில் நெகிழ்ச்சி தன்மையுடன் செயல்படக்கூடிய வணிக அமைப்பாகும். தனியாள் வணிகத்தை மாற்ற எவ்வித செலவுகள் இல்லாமலும் எளிதில் மாற்றிக்கொள்ளலாம்.

**4.வியாபார ரகசியங்களை காத்தல் :** வியாபார வெற்றிக்கு தொழில் ரகசியங்களை காத்தல் அவசியம். தனியாள் வணிகத்தில் ஒருவர் மட்டும் என்பதால் வியாபார ரகசியங்களை காக்க இயலும். **5.விரைவான முடிவு :** தனியாள் வணிகத்தில் ஒருவர் வேறுஉரிமையாளர் இல்லை எனவே அவர் காலதாமதமின்றி விரைவாக முடிவெடுக்கலாம்

**6.அதிக வெகுமதி :** தனியாள் வணிகத்தில் தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத்தவரினால் நட்டம் பொருளாதார சிக்கனம் ஆகிய நன்மைகளை தனியாள் வணிகருக்கு சாரும். **7.அதிக நிதி தரமதிப்பீடு** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. சொந்த சொத்துகளில் இருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும்.அதனால் பலர் கடன் தரமுன்வருவார்.

**8.சுய வேலைவாய்ப்பு :** குறைந்த மூலதன முடைய பலருக்கும் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது. அடிமைத்தொழில் செய்ய விரும்பாத நபர்களுக்கு தனியாள் வணிகம் வாய்ப்பளிக்கிறது.

**9.ஆளுமை வளர்ச்சி :** தன்னம்பிக்கை தொழில் தொடங்கும் முயர்சி பொறுப்புணர்ச்சி சுதந்திரமாக முடிவெடுத்தல் போன்றவை வளர்கிறது.

**10.எளிமையாக கலைப்பு :** .கலைப்பது மிகவும் எளிது. விரும்பிய போது எவ்வித சட்ட சிக்கல்களும் இல்லாமல் கலைக்கலாம்.

**65.ஆ) செபின் நோக்கம் இயல்பு பணிகள் அதிகாரம் நோக்கம் :**

1.முதலீட்டாளர்களின் நலநனை பாதுகாத்தல்

2.பத்திரச்சந்தை நடவடிக்கைகளை ஊக்கப்படுத்துதல். அபிவிருத்தி மற்றும் ஒழுங்குபடுத்துதல் அதனை சார்ந்த நடவடிக்கைகளியின் ஈடுபடுதல்.1992 ல் வாரியமாக செபி ஏற்படுத்தப்பட்ட போது அடைதரகர்களின் செயல்கள் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துதல் உள்வணிகத்தை தடைசெய்தல் பங்குகளின் ஏலத்தை நடைமுறைக்கோட்பாடுகள் உருவாக்கி நாணயமாக நடக்கச் செய்தல் ஆகிய பணி இதற்கு இருந்தது. **இயல்புகள்:**

1.செபிச்சட்டத்தின் படி ஏற்படுத்தப்பட்ட நீடித்த வாழ்வு மற்றும் பொது முத்திரை கொண்ட ஒரு கூட்டுருவாக்கம் ஆகும். 2.செபின் தலைமை அலுவலகம் மும்பையில் உள்ள கிளை அலுவலகங்கள் இந்தியாவில் மற்ற நகரங்களிலும் விளங்கும்.

3.(அ)சபைத்தலைவர்கள் (ஆ)நிதி மற்றும் சட்டஅமைச்சக அலுவலர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2 உறுப்பினர்கள்

(இ)ரிசர்வ் வங்கி அலுவலர்களழிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் (ஈ)மேலும் 2 உறுப்பினர்கள் சபைத்தலைவர்கள் மற்றும் வாரியத்தின் 5 உறுப்பினர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படுவர். 4.செபின் பொது கணிப்ப வழிகாட்டுதல் **அதிகாரங்கள் :** மேலாண்மை ஆகியவை உறுப்பினர்களிடம் இருக்கும். இவ்உறுப்பினர்கள் அவை வாரியத்தின் எல்லா அதிகாரங்களையும் பெற்று பணிகளை நிரை வேற்றுவோம் 1.வாரியத்தின் சபைத்தலைவரையும் மற்ற உறுப்பினர்களையும் அப்பொறுப்பில் இருந்து நீக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. 2.மத்திய அரசு நிதிஉதவி செய்வதுடன் வாரியத்திற்கு அவ்வபொழுது தேவைப்படும் மானியங்களையும் வழங்குகிறது. 3.செபின் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுக்கும் பொழுது அவற்றிகான அனைகலை வழங்க மத்திய அரசுக்கு உரிமை உண்டு.வாரிம் தவறுதல் செய்யும் பொழுது அவற்றை விலக்கி சரிசெய்து நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு அதிகாரம் உண்டு. **பணிகள் :** 1.பங்குமாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2.இடைத்தரகர்களான பங்கு தரகர்கள் துணைத்தரகர்கள் வெளியிட்டு வங்கியர் ஓப்புறுதியாளர்கள் மற்றம் பத்திர சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளை பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்ததல்
3.பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களை பதிவு செய்து ஒழுங்கு படுத்ததல்.
4.சுயகட்டுப்பாடு நிறுவனங்களை தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்ததலும்
5.பத்திர சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளை தடை செய்தல்
6.முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தர் மற்றம் இடைத்தரகர்களுக்கான பயிர்ச்சியளித்தல்
7.பத்திரங்களுக்கான உள்வணிகத்தை தடைசெய்தல்
8.பங்குகளை கணிசமான அளவில் வாங்கி நிறுமங்களை எடுத்தக்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்ததல்
9.பங்குமாற்றகங்களிலிருந்து ஆகியவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது பங்கு மற்றகங்களின் பரிசோதனை செய்தல் விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்
10.மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணியினை செய்தல்

**66)அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் : 1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43 :**விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம். **(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை :**கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம். **(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால் **(3)கூட்டாளியின் தீய நடத்தை** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின் **(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை நலனை பிறருக்கு மாற்றி கொடுத்தால் **(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால் **(6)தொடர் நட்டம்** :கூட்டாண்மை நிறுவனத்தில் தொடர்ந்து நட்டம் ஏற்பட்டால் கலைக்க நேரிடும்.

**66ஆ) நிறுமச்செயலரின் பணிகளும் கடமைகளும் :**
1.நிறுமத்தின் செயலகத்துறையின் தலைவர் என்ற முறையில் தனக்குகீழ்லுள்ள அனைத்து நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் நிறுமத்தின் முன்மை அதிகாரி என்ற முறை உண்மைச்சான்றென உறுதியளிக்க வேண்டிய ஆவணங்களில் கையெழுத்திடுதல் அவருடையபணி.
2.இயக்குநரவை தலைவரிடம் கலந்தாலோசித்து இயக்குநரவை கூட்டநாள் இடம் நேரம் முதலியவற்றை முடிவ செய்தலும் அதன் நிகழ்ச்சி நிரலைத்தயாரித்து அதனை கூட்டஅறிவிக்கையுடன் இணைத்தணுப்புதலுமாரும்.
3.இயக்குநரவை கூட்டத்தின் செயல்பாடுகள் நிறுமங்கள் சட்ட விதிமுறைகளுக்கு முரண்படாமலும் அமைப்பு முறையேடு செயல் முறை விதிகள் ஆகியவற்றின் வரம்பு மிகாமலிருக்க பார்த்துகொள்ள வேண்டியது அவர் பணிகள் ஆகும்.
4.பங்குநர்களின் நலன் சிறக்கும் வகையில் செயலர் பணிசெய்கிறார்.அவர்களுடன் கூர்மதிப்புடன் நடந்தகொள்ள வேண்டும்.
5.பங்குநர்கள் எழுப்பும் வினாக்களுக்கும் ஐயங்கட்கும் உாயி முறையில் பண்புகாத்து காலங்கடத்தாமல் பதிலளிக்க வேண்டும்.
சட்ட முறைக்கடைமைகள் :

1.எச் சட்டத்தின் கீழாவது உண்மையென சான்றளிக்க வேண்டியிருப்பின் அத்தகைய ஆவணத்தில் கையொப்பமிடல்
2.தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை தக்கல் செய்ய
3.நிறுமத்தின் பதிவலுவலகம் உள்ள இடம்குறித்த அறிக்கையைத்தாக்கல் செய்ய
4.தொழில் தொடக்கச் சான்றிதல் பெற சட்டமுறை உறுதிவிலம்பல் செய்தலும் அவற்றை பதிவாளரிடம் தக்கல் செய்தலும்.
5.நிறுமத்தின் ஆண்டறிக்கையில் கையப்பமிடல்
பொதுக் கடமைகள் :
1.தன்னுடைய கமைகளை மிகுந்த கவனத்துடனும் நேர்மையுடனும் தன் அதிகார எல்லையை மீறாது செயல்படலும்.
2.இரகசியமான செய்திகளை வெளியிடாது காத்தல்.

**67அ)நிறுமத்திற்கும் கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகள்:**

| பொருள் | கூட்டாண்மை | கூட்டுப்பங்கு நிறுமம் |
|---|---|---|
| சட்டம் | 1932 | 1956 |
| பதிவு செய்தல் | கட்டாயமன்று. | கட்டாயமாக்கப்பட்டுள்ளது |
| பங்கு மாற்றம் | மாற்றித்தரஇயலாது. | மாற்றக் கூடியவை. |
| மேலாண்மை | அனைத்துகூட்டாளிகள் | இயக்குனர் அவை |
| நீடித்த வாழ்வு | நிலையற்றது | நிலையானது |
| பொறுப்பு | கூட்டு மற்றும் தனி | வரையறு |
| தணிக்கை | விருப்பம் | சட்டப்படி |
| எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகம் வங்கி 10 பிறதொழில் 20 | தனி 2 பொது 7 தனி 50 பொது வரையறையில்லை |
| உறுப்பினராதல் | தனிநபர் மட்டுமே | நிறுமமே ஒரு நிறுமத்தை வாங்கலாம் |
| கலைப்பு | எளிது | சட்டப்படி |

**67ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் நன்மைகள்**
**1. அமைப்பது எளிது** கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது எளிது. செலவும் அதிகமில்லை. பதிவு நடைமுறையும் எளிமையானது ஆகும்.

**2. வரையறா உறுப்பினர்கள்** அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு வரையறை இல்லை. ஒவ்வொரு உறுப்பினரும் தன் விருப்பப்படி சேரவோ அல்லது விலகவோ சுதந்திரம் உண்டு.**3. மக்களாட்சி மேலாண்மை** கூட்டுறவு அமைப்பின் மேலாண்மை மக்களாட்சி முறையில் அமைந்துள்ளது. எவ்வளவு முதலீடு செய்திருப்பினும் உறுப்பினர்களுக்கு சமமான வாக்குரிமை உண்டு. ஆளுக்கொரு வாக்கு என்ற தத்துவம் கடைபிடிக்கப்படுகிறது. பெருமளவில் பங்குகளை வைத்துள்ளவர்களின் கைகளில் அச்சங்கங்கள் கட்டுண்டு கிடப்பதில்லை. **4. வரையறு பொறுப்பு** உறுப்பினர்களின் பொறுப்பு அவர்கள் வைத்துள்ள பங்குகளின் பெயரளவு மதிப்பு வரை என வரையறுக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்களின் தனிப்பட்ட சொத்துக்களை நிறுமக் கடன்களுக்காக இழக்க வேண்டிய அவசியமில்லை. **5. நிலையான தன்மை** பதிவு செய்வதால் கூட்டுறவுச் சங்கங்களும் நிரந்தரமான சட்டத் தோற்றம் பெற்றிருக்கின்றன. உறுப்பினர்களின் இறப்பு, மன சமநிலையற்ற நிலை, மற்றும் நொடிப்பு நிலை ஆகியவற்றால் இவ்வமைப்பு பாதிக்கப்படுவதில்லை. இது நீடித்த வாழ்வு உடையது.
**6. மேலாண்மையில் சிக்கனம்** பொதுவாக இவ்வமைப்பில் அதன் உறுப்பினர்களே சங்கத்தை மேலாண்மை செய்கின்றனர். இயக்குநரவைக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் கௌரவ சேவையை அளிக்கின்றனர். விளம்பரச் செலவுகளும் மிகக் குறைவு. **7. மலிவான சேவை** இச்சங்கம் நல்ல சேவைகளை மலிவான செலவில் அளிக்கிறது. சேவை என்பது முதன்மை நோக்கம். இலாபம் ஈட்டுவது இரண்டாம் பட்சமாகும். **8. வரிச் சலுகைகள்** கூட்டுறவு நிறுவனங்களின் வருவாய்க்கு வருமான வரி விதிக்கப்படுவதில்லை. வருமான வரி, முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.
**9. சமூகப் பயன்** கூட்டுறவு அமைப்பு என்பது போட்டியில்லா நிறுவனமாகும். தனிமனித சுதந்திரம், சமூக நீதி மற்றும் பரஸ்பர கூட்டுறவை இது வளர்க்கிறது. **10. சேமிப்பு வழக்கம்** உறுப்பினர்களிடையே சேமிப்புபழக்கம் தனக்குத் தானே உதவி, சமூக நீதி ஆகிய நல்ல நெறிகளை இது வளர்க்கிறது.

